அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் III.] SEPTEMBER, 1903-ஹு செப்டெம்பர். [இலக்கம். 3.

நம்மிடத்து நேசமுள்ள நல்ல பக்ஷிகள்.

ஆலோசித்துப் பார்க்கையில், நம்முடைய நன்மையைக் கோருகிற பிராணி இவ்வுலகில் பறவைகளைப்பார்க்கிலும் வேறொன்றுமில்லை யென்னலாம். பறவைகள் நமக்காகவே பல நல்ல வேலைகளைச் செய்துகொண்டு வாழ்கின்றன. பக்ஷிகள் இல்லாவிட்டால், நமக்குப் பிழைப்பேது? நாம் இட்ட பயிர்களைச் சுண்டெலிகளும் சிறிய பூச்சிகளும் பாழாக்கிவிடுமே; அவை அப்படிச் செய்யவொட்டாமல் அவற்றை யழித்துப் பயிர் பச்சைகளை விசேஷமாக விருத்தி செய்பவை பக்ஷிகளே யன்றோ? பக்ஷிகள் அப்படிச் செய்யாவிட்டால், பசுமையான பொருள் ஒன்றும் பூமியில் காணக் கிடைக்காது; வெகு சீக்கிரத்தில் இப்பூமி வாஸயோக்கிய மல்லாததாகிவிடும்.

இந்த உபகாரங்களை நமக்குச் செய்யும்படி நாம் பக்ஷிகளைக் கேட்டுக்கொண்டோமா? அவை தாமாகவேயல்லவோ நம்முடைய நன்மையை நாடி இந்த நல்ல காரியங்களைச் செய்கின்றன? ஆகையால் 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்று ஔவையார் புகழ்ந்து கூறியபடி, இப்படி உதவிசெய்யும் பிராணிகள் நமக்குக் கிடைப்பதற்கரிய தேவாமிருதத்திற் கொப்பானவை யன்றோ? நாம் ஒரு உபகாரமும் செய்யாமலிருக்க, நமக்கு இப்படிப் பட்ட மகோபகாரஞ் செய்கிற ஜந்துக்களுக்குப் பிரதியுபகாரமாக,

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது'

என்று நாயனார் சொல்லியபடி நாம் இந்த மூன்று உலகங்களையும் கொடுத்தாலும் போதுமோ? அவைகளை நாம் கொஞ்சம் பக்ஷமாக நடத்தி அவற்றுடனே நட்புச் செய்துகொள்ள முயல்வோமானால், அவை நமக்குப் பயிர்களைக் காப்பாற்றுகிற உதவியொன்று மாத்திரமே யன்றி, மேலான ஆநந்தத்தையும் விளைவிக்கும்.

பார்க்கும்பொழுதே பக்ஷிகள், நாம் கண் படைத்தது ஸபலமாகும்படி கண்ணுக்கினிய காட்சியை யளிக்கின்றன. பக்ஷிகளின் சிறகுகள் எவ்வளவு விசித்திரமாயும் வியக்கத்தக்கவையாயு மிருக்கின்றன! ஆ! பறவைகள் வானத்தில் பறக்கும்போது பார்த்தால் பேரானந்தமாயிருக்கிறதல்லவா? பக்ஷிகள் தோட்டங்களிலும் தோப்புகளிலும் காடுகளிலும் கலகலவென்று கீச்சிட்டுக் கூவுவதைக் கேட்பதினும் செவிக்கின்பம் வேறொன்றுண்டோ? இளவேனிற்பருவத்தில் மாங்குயில்கள் தீங்குரலாய்ப் பாடுவதைக் கேட்டவர்களும், மாரிகாலத்தில் மேகத்தைக் கண்ட மயில்கள் தமது அழகிய தோகையை விரித்தாடுவதைக் கண்டவர்களும் அவற்றினும் பேரானந்தம் வேறொன்று உண்டென்று எண்ணுவார்களோ?

பக்ஷிகளுடைய வழக்கங்களையும் அவை செய்யும் காரியங்களையும் பார்த்தால் பின்னும் புதுமையாயிருக்கும். பறவைகள் பிரதி வருஷம் பல்லாயிரம் மைல் தூரம் வேறு தேசங்களுக்குச் சஞ்சாரம்போய் மறுபடி சுதேசத்திற்குத் திரும்பி வரு

கின்றன; மிகுந்த ஸாமர்த்தியமுள்ள சிற்பிகளும் செய்யமுடியாத மிகவும் அற்புதமான கூடுகள் கட்டி, முட்டையிட்டு, அந்த முட்டைகளை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகின்றன.

நமக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குகிற இந்த அழகான பிராணிகள் நமது சமீபத்தில் வசிக்க வேண்டுமென்று நாம் ஆசைப்படுவோமானல், அவைகளுக்குத் தீங்குசெய்கிற நினைப்பு நமக்கு இல்லை என்பதை நாம் அவற்றிற்கு நன்ருகக் காண்பிக்கவேண்டும். நமக்கு நல்லெண்ணமிருக்கிறதென்பதைப் பக்ஷிகள் தெரிந்துகொண்டால், அப்பொழுது அவை நமது வீட்டிற்குச் சமீபத்தில் வந்து, அவற்றின் சந்தோஷமான பாட்டுக்களால் நம்மை மனங்களிக்கச்செய்து, அவற்றின் அற்புதமான அறிவினல் ஆநந்தத்தை யுண்டாக்கும்.

இப்படியிருந்தும் மனிதர்களைக் கண்டால் பயப்படவேண்டுமென்று பக்ஷிகள் அறிந்துகொண்டிருக்கின்றன என்பதை நினைக்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது. ஆனலும் அவைகள் என்னசெய்யமாட்டும்? ஐயோ பாவம்! அநேகம் மனிதர்கள் பக்ஷிகளைக் கொன்றிருக்கிருர்கள், அநேகர் வலை போட்டுப் பிடிக்கிருர்கள்; அநேகர் அவற்றின் கூடுகளையும் முட்டைகளையும் குஞ்சுகளையும் திருடுகிருர்களே! நண்பர்களே! நம்மிடத்தில் நேசம் பாராட்டுகிற அருமையான பக்ஷிகள் நம்மைக் கண்டால் அஞ்சி நடுங்கும்படி நாம் அவ்வளவு கொடியவர்களாயிருக்கலாமோ?

மனித சஞ்சாரமில்லாத தீவாந்தரங்களிலேகூடப் பறவைகள் மனிதர்களுடனே பழகி அவர்களுடன் கூடி வாழும் இயல்புடையனவாயிருக்கின்றனவென்று தேசசஞ்சாரம் செய்பவர்கள் கண்டு கொண்டாடுகிருர்கள். பறவைகளைப் பிடிக்கும் பொல்லாத மனிதர்களைக் கண்டால் பக்ஷிகள் உடனே அவர்களுடைய சுபாவ மிப்படிப்பட்டதென்று தெரிந்துகொண்டு அவர்களைக் கண்ட தக்ஷணமே அஞ்சி அப்புறம் ஓடிப்போகின்றன. ஆனலும் நம்மை நேசிக்கவேண்டுமென்கிற ஆசையே அவைகளுக்கு மிகவும் அதிகம். நம்முடைய பக்கத்தில் வந்தாலும் நாம் ஒன்றும் உபத்திரவம் செய்யமாட்டோமென்பதை நாம் அந்தப் பக்ஷிகளுக்குத் தெரியும்படி செய்துவிடுவோமானல், பிறகு அவை நம்மிடத்தில் அதிகமான பிரீதியுள்ளவையாகி நம்முடைய பக்கத்தில் வந்து சேரும். சில பக்ஷிகள் மனிதர்களிடத்தில் அதிகமான நம்பிக்கையும் விசுவாசமு முடையவைகளாகி, அவர்களுடைய வீட்டுத் தாழ்வாரங்களிலும் கூரைகளிலும் அச்சமில்லாமல் கூடுகட்டி முட்டையிடுவதை நாம் நேரில் கண்ணுரக் கண்டிருக்கிருேமல்லவா?

ஐரோப்பா கண்டத்தில் அநேக தேசங்களிலே கூளி கழுகு முதலான பக்ஷிகளை ஒருவரும் கொல்லக்கூடாதென்று துரைத்தனத்தார் சட்டம் ஏற்படுத்தியிருக்கிருர்கள். ஏனென்ருல், அவை மிகவும் உபயோகமான பக்ஷிகள்; உலகத்தில் கொடிய கொள்ளைநோய்களை உண்டாக்குகிற பல பொருள்களையும் கண்டு தின்று பூமியெங்கும் அழுக்கில்லாமல் சுத்திசெய்கின்றவை. தமக்குப் பகையாளிகள் ஒருவருமில்லையென்று பக்ஷிகளுக்குத் தெரிந்துபோனல், அவை யுடனே நமது வீதிகளில் கோழிகள்போலவே கூடிவந்து உலாவும். அப்படிப்பட்ட பக்ஷிகளிடத்தில் நாம் பிரீதி பாராட்டாமல் பகைவர்களாயிருக்கலாமோ? பக்ஷிகள் நம்மிடத்தில் நம்பிக்கையுள்ளவைகளாகி நம்மோடு கூடி வாழும்படி செய்வதற்கு நல்ல வழியென்னவென்ருல், நமது வீடுகளிலும் தோட்டங்களிலும் பறவைகள் வந்து சுகமாய் வசிப்பதற்கு வேண்டிய இடங்கள் அமைத்துக்கொடுப்பதும், அவைகள் வந்து நீராடவும் தண்ணீர் குடிக்கவும் உயரமான விடங்களில் தண்ணீர்த் தொட்டிகள் அமைத்துவைப்பதும், பிரதிதினம் அவைகளுக்கு உணவான தானியங்களை நமது வீட்டின் வாயில்களில் இறைத்து அவை வந்து பொறுக்கித் தின்னும்படி செய்வதுமேயாம். நாம் இவ்வளவு நன்மைசெய்ய உடன்படுவோமானல், பிறகு அவை ஒருபோதும் நமது வீட்டைவிட்டு அப்புறம் போகாமல் எப்போதும் நமக்கு ஆநந்தம் விளைவித்துக்கொண்டிருக்குமல்லவா?

இந்துக்களுடைய தேவாலயம் முதலான இடங்களிலே கோபுர மண்டபப் பிராகாராதிகளிலும் பல பெரிய மாளிகைகளிலும் அங்கங்கே பக்ஷிகள் வந்து கூட்டங் கூட்டமாக வசிப்பதற்கு வேண்டிய புருக்கூடு முதலான பற்பல இடங்கள் அமைத்தே கட்டடங் கட்டுவது ஆதிகாலந்தொடங்கி வழக்கமாயிருப்பதால், நம்முன்னேர்கள் பக்ஷிகளிடத்தில் மிகவும் பிரீதியுள்ளவர்களாய் அவைகளைப் பரிபாலித்து வந்தார்களென்பது நன்ருக விளங்குகிறதல்லவா? அவர்களைப்போலவே நாமும் ஜீவகாருணியமுடையவர்களாகிக் கடவுளுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரரா யிருக்க முயல்வோம்.

மனிதர் பாஷையும் மற்றப் பிராணிகளின் பாஷையும்.

மனிதர் பேசுவதை மற்றப் பிராணிகள் அறிந்துகொள்ளுகின்றன வென்பதற்கு அனேகம் திருஷ்டாந்தரங்கள் உண்டு. குழந்தைகளைப்போல, மற்றப் பிராணிகளும் முதலில் தம்தம் பெயரைக் கற்றுக்கொண்டு பேச முயற்சி செய்கின்றன. எவ்விதமான விசேஷ தொனியோடும் சொல்லக்கூடாத அனேகம் வார்த்தைகளடங்கிய ஒரு நீளமான சொல் கோவையின் அர்த்தத்தை நாய்க ளறிந்துகொள்ளுகின்றன.

மிருகங்களின் சுபாவத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் பண்டிதர் ஒருவரிடத்திலிருந்த சில நீர் நாய்கள் அதனதன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் அவரிடம் வரும். கலைமான், கிளி முதலான வாயில்லா ஜந்துக்கள் தங்கள் பெயரைச் சொல்லக் கேட்டவுடனே அதைக் கவனித்துத் தங்களையே கூப்பிடுகிறார்களென்று அறிந்துகொள்ளுகின்றன. மிருகங்கள் சில பதங்களின் அர்த்தத்தையும் அறிந்துகொள்ளுகின்றன. பழக்கப்பட்ட நாயானது "இதைக் கண்டெடு, அதைக் கொண்டுவா" என்று சொன்னால் அப்பேச்சை அறிந்து கொள்ளுகிறது. குதிரை, நாய், யானை முதலிய பழக்கக்கூடிய இன்னு மனேகவித ஜந்துக்கள் வெவ்வேறு அபிப்பிராயத்தைக் காட்டக்கூடிய வார்த்தைகளை அறிந்துகொள்ளுகின்றன. இப்படியிருக்க, மனிதனும் மிருகங்களால் கூவப்பட்ட சில சப்தங்களை அறிந்துகொள்ளுகிறான். இதனாலேதான் வேட்டையாடுகிறவர்கள் தங்கள் நாய்களுடைய குரலின் சப்த பேதத்தை யறிந்து, கோபத்தைக் குறிக்கும் சப்தம் ஏதோ ஒரு வருத்தத்தைக் குறிக்கிறது என்பதாக அறிந்துகொள்ளுகிறார்கள். ஒரே இனத்தைச் சேர்ந்த பிராணிகள் ஒன்றையொன்று அறிந்து கொள்ளக்கூடும். மிருகங்களின் சுபாவத்தைப்பற்றி விசாரிக்கும் ஒரு வித்வான் பின்வருமாறு சொல்லுகிறார்:—திடீரென்று பயமுறுத்தப்பட்டால், தாய்க் கோழி ஒருவிதமான கூச்சலிட்டுத் தங்களுக்கு அபாயம் வந்திருக்கிறதென்கிற விஷயத்தைத் தன் குஞ்சுகளுக்குத் தெரியப்படுத்தும்; அதனால் அவைகளுக்குள் ஒருவிதமான பாஷை யிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. தன் சிறகுக்குள் வந்து புகுந்துகொள்ளச் சொல்ல ஒருவிதமான சப்தம் செய்கிறது; சாப்பிடக் கூப்பிட மற்றொருவிதமான சப்தமும், கூட்டுக்குள் வந்து புகுந்துகொள்ளச் சொல்ல வேறொருவிதமான சப்தமும் செய்கிறது. பக்ஷிக்கூட்டத்தில் ஓடவேண்டுமானால் அவைகள் ஒருவிதமான சப்தம் செய்வதையும், ஒளிந்து அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் மற்றொருவிதமான சப்தம் செய்வதையும், எதிர்க்கவாவது சத்துருவை விலக்கிக் கொள்ளவாவது வேண்டுமானால் வேறொருவிதமான சப்தம் செய்வதையும் நாம் கேட்டிருக்கிறோம் என்கிறார்.

பக்ஷிகள் சேரும்போதும், குஞ்சு பொரிக்கும் போதும், தங்கள் குஞ்சுகளை வளர்க்கும்போதும் அவைகள் பேசும் பாஷை தெளிவான அர்த்தத்தைக் கொடுத்து அனேக விஷயங்களைக் குறிக்கின்றன. ஆண் தன் பிரியத்தை வெளியிட்டுக் காட்டுவதும், பெண் அடக்கமாக இருந்து மனதைக் கவருவதும், அபாயத்தை விலக்க எச்சரிக்கை செய்வதும், கோபம், பொறாமை, ஒற்றுமை முதலான விருப்பம் வெறுப்புகளைக் காட்டுவதுமாகிய இவைகளெல்லாம் பக்ஷிகளின் மனதில் அனேகவிதமான எண்ணங்களிருக்கின்றனவென்பதைத் தெளிவாயும் நாம் அறிந்துகொள்ளும்படியாயும் காட்டுகின்றன. கூட்டங் கூட்டமாகவாவது மந்தை மந்தையாகவாவது வசிக்கிற அனேக மிருகங்கள் தங்களுக்குள் சில காவலாளிகளை நியமிக்கின்றன. அபாயம் வரும்போது அவைகள் எச்சரிக்கின்றன. அதை மற்றவைகள் நன்றாய் அறிந்துகொள்ளுகின்றன. தாங்கள் உணவு உண்ணுமிடத்திற்குப் போகும் போது குரங்குகள் காவல் காக்கவும், அவசியமானால் எச்சரிக்கவும், தங்களில் ஒன்றை ஒரு மேட்டிலிருக்க நியமிக்கின்றன. காகங்களும், அண்டங்காகங்களும் தங்களுக்குள் காவலாளிகளை வைத்திருக்கின்றனவென்பது நமக்குத் தெரியும். தூக்கணாங்குருவி யிடுகிற கூச்சலால் அதைச் சேர்ந்த குருவிகள் பத்திரமான புகலிடத்துக்கு ஓடிப்போகின்றன.

ஒரே இனத்துப் பிராணிகள் தங்க ளினமானவை பேசுவதை அறிந்துகொள்வதுந் தவிர, மற்ற இனத்துப் பிராணிகளின் சொல்லுவதையும் அறிகின்றன. கோழியானது தான் கத்தித் தன் குஞ்சுகளை உணவுக்குக் கூப்பிடும்போது, மற்றப் பக்ஷிகள்கூட அந்த இடத்திற்கு ஓடுகின்றன. தங்களை யிரையாக்கித் தின்னும் பக்ஷி சமீபத்தில் வருவதைக் கண்டு சேவல் கூச்சலிட்டால், அந்த இனத்தைச் சேர்ந்த பெட்டைக்கோழிகள்மாத்திரமா ஓடிப்போகின்றன? அப்படிக்கல்ல, மற்றப் பக்ஷிகளும் அந்தவிடம் விட்டு ஓடிப்போகின்றன. ஒருவகைப் பக்ஷியானது தங்களைக் கொல்லும் பக்ஷியைக் கண்டவுடன் ஒருவிதமாகச் சப்தம் செய்கிறது. அந்தச் சப்தத்தைக் கேட்டவுடனே அதன் இனத்தைப்போலவே மற்றப் பக்ஷிகளும் ஓடி ஒளித்துக்கொள்ளுகின்றன. இன்னு மனேக உதாரணங்களைச் சொல்லுகிற ஒரு வித்வான், தங்கள் இனத்தைத் தவிர்த்த மற்ற இனத்துப் பக்ஷிகளின் பாஷையை அறியும் வல்லமை சில பக்ஷிகளுக்கு உண்டு என்பது தெளிவாயிருக்கிறதென்று முடிவான தீர்ப்பாகச் சொல்லுகிறார்.

பாரமான சுமை.

ஒரு சமயத்தில் ஒருவன் வீடு கட்டுவதற்காக வேண்டிய மரத்துண்டுகளை ஒரு வண்டியில் விசேஷமா யேற்றி ஓட்டிக்கொண்டு போனான். அந்த வண்டியில் கட்டிய எருதுகள் அந்தப் பெருஞ்சுமையை இழுக்கமாட்டாமல் மன்றாடித் தவித்தன. அவை எவ்வளவு பொறுமையாய் அவ்வண்டியை யிழுக்கப் பாடுபட்டும், அதில் அளவற்ற மரத்துண்டுகள் ஏற்றப்பட்டிருந்ததனால் ஒரு அடிகூட அந்த வண்டியை யிழுக்க அவைகளால் முடியவில்லை. அதனால் அந்த மாடுகள் அடிக்கடி படுத்துக்கொண்டன. அது கண்டு வண்டிக்காரன் கோபங்கொண்டு உரத்துக்

கூவி அதட்டி வண்டிமாடுகளைக் கொடுமையாகச் சவுக்கினால் அடிக்கத்தலைப்பட்டான். அவன் அடிக்க அடிக்க, அந்த எருதுகள் வண்டியை யிழுக்க முயல்வதை விட்டு உதைக்க ஆரம்பித்தன.

வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த கூலிவேலைக்காரன் இதைப் பார்த்து உடனே அந்த வண்டியண்டை புறப்பட்டுவந்து வண்டிக்காரனைப் பார்த்து, 'அடே வண்டிக்காரா! நீ சற்று வண்டியை விட்டுக் கீழே யிறங்கு; நான் இதை ஓட்டிப்பார்க்கிறேன்' என்றான்.

அப்படியே வண்டிக்காரன் கீழே யிறங்கினபிறகு அந்த வேலைக்காரன், முதலில் ஒரு எருதை நன்றாகத் தட்டித் தடவிக்கொடுத்து அதற்கு உற்சாகமுண்டாகும்படி அன்பான வார்த்தைகள் அநேகம் சொல்லி, பிறகு மற்றொரு எருதண்டையும் போய் அதையும் அப்படியே உற்சாகபடுத்தினான்.

அப்புறம் அவன் பாரமான சில மரத்துண்டுகளை வண்டியினின்றும் கீழே யெடுத்துப்போட்டு, தான் கையில் வைத்திருந்த அடையை அந்த எருதுகளுக்குக் கொடுத்துத் தின்னும்படி செய்து அதன்பிறகு தான் வண்டிமேலேறிக்கொண்டு கயிற்றைக் கையில் பிடித்து, எருதுகளை மறுபடி தன் பேச்சினால் சந்தோஷப்படுத்தி 'என் கண்மணிகளே! ஏதோ இப்பொழுது கொஞ்சம் கஷ்டப்பட்டு வண்டியை இழுங்கள் பார்ப்போம்' என்றான்.

அதைக் கேட்டவுடனே அந்த மாடுகள் அதிகமான ஊக்கம் கொண்டவைகளாகித் தமது பூர்ணமான பலத்துடனே வண்டியை யிழுக்கப் பிரயத்தனப்பட்டன. மாடுகள் முனைந்து இழுத்தபொழுது வண்டி மெல்ல மெல்ல நகர்ந்து கடகடவென்ற சத்தத்துடனே சென்றது.

பிறகு அந்த வேலைக்காரன் வண்டியை விட்டு இறங்கி வண்டிக்காரனைப் பார்த்து, 'அப்பா! வண்டி இப்பொழுது எப்படி ஓடுகிறது பார்; கோபத்துடனே அதட்டிக் கடிந்துபேசினால், எவர்க்கும் வேலை செய்வது வருத்தமாகவே யிருக்கும்; நம்மைப் போலவே நம்முடைய எளிய பிராணிகளையும் நாம் நினைக்கவேண்டும். இப்பொழுது நான் செய்து காட்டியபடியே நீ இனிமேல் செய்வாயானால், எப்படிப்பட்ட காரியமும் எளிதாக முடியும்' என்று சொல்லிப் போய்விட்டான். 'இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம், வன்சொலா லென்று மகிழாது.'

மிருகேந்திரன்.

கூட்டிலடைபட்ட ஒரு சிங்கம் தன் கதையைத் தானே சொன்னதாவது:—

நான் சிறப்புப்பெற்ற ஒரு சிங்கம்; உலகத்திலுள்ள ஸகலமான பிராணிகளிலும் அதிகமான பலமுள்ளவன். நான் எங்கேயோ வெகு தூரத்திற்கப்பால் ஆப்பிரிக்காவிலுள்ள அரணியங்களில் வசிப்பவன். நான் கர்ச்சிப்பேனானால் அந்த கர்ச்சனையைக் கேட்பவர்கள் யாவரும் பயந்து நடுங்குவார்கள்.

நான் எனக்கும் என் குட்டிகளுக்கும் வேண்டிய உணவுக்காகவே காட்டு மிருகங்களை வேட்டையாடுவேன்; நான் விளையாட்டுக்காக ஒன்றையும் கொன்றதில்லை. வீணாகப் பிராணிகளை இம்சிப்பதும், அது ஒரு விளையாட்டென்று சாக்குச் சொல்வதும் மனிதர்களுடைய காரியமேயாம். காட்டு மிருகங்கள் மனிதர்களைப்போல் அவ்வளவு கொடியவைகளாய் ஒருபோது மிருப்பதில்லை.

நான் இவ்வளவு பலிஷ்டனாயிருக்கையிலும் இந்தக் கூட்டில் எப்படி அடைபட்டிருக்கிறேனோவென்று என்னைப் பார்க்கையில் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். மனிதர்களைக் கண்டால் எனக்கும் நடுக்கந்தான். அவர்கள் எவ்வளவு புத்திசாலிகளோ, அவ்வளவுக் கவ்வளவு கொடுமையுள்ளவர்கள். அவர்கள் என்னைப் பிடிக்க வலையொன்று செய்து, அதன் மூலமாய் என்னைப் பிடித்துக்கொண்டார்கள். என்றாலும் முறிப்பதற்கு அசாத்தியமான அதிகமாகிய பலமுள்ள இந்த இருப்புக்கம்பிகளை அவர்களே செய்திருக்கிறார்கள்.

இந்தக் கூட்டைவிட்டு வெளிக் கிளம்பிப்போக நான் என்னாலானவரையில் பாடுபட்டுப் பார்த்தேன்; அதனால் நான் அயர்ந்து சோர்ந்து வலிவு குன்றிப் போனேனேதவிர, இதை முறிக்கத் திறமையுடையவனாகவில்லை. விசாலமான வெளிகளிலும், ஆழமான ஓடைகளிலும் சஞ்சரித்து, அரணியங்களிலுள்ள மிகப் பரிசுத்தமான நல்ல காற்றை அனுபவிக்கவே நான் அதிகமாக விரும்புகிறேன்.

நான் இங்கே படுத்துத் தூங்கும்பொழுது ஒவ்வொரு வேளையில் எனது பழைய இருப்பிடத்தைப் பற்றிக் கனவு காண்பேன். எப்பொழுதும் இவ்விடம் வந்து கூட்டங் கூடி என்னை வேடிக்கை பார்க்கிற பிரஜைகளும், இங்குள்ள துர்க்கந்தம் முதலியவைகளும் அக்காலத்தில் எனக்கு நினைவு வருவதில்லை; மறுபடியும் மிகவும் விசாலமான வனாந்தரத்தில் சுதந்தரமாகச்சஞ்சரிப்பதாகவேதோன்றும்.

அப்படிக் கனவு காண்கிற வேளைகளில் நான் அதிக சந்தோஷத்துடனே எழும்பிக் குதிப்பேன்; அப்படிக் குதிக்க இடமில்லாமல் இங்கே சுற்றியிருப்புக் கம்பிகளும் மேலே தாழமான கூரையுமேயிருப்பதால் அவற்றில் தாக்கி, அந்த வருத்தத்தாலும் விசனத்தாலும் உரத்துக் கர்ச்சனை செய்வேன்; என்னைப் பிடித்து வைத்திருப்பவன் அதைக் கேட்டவுடனே என்னைத் தண்டிப்பதற்கு நுனியில் மிகவும் கூராக்கப்பட்ட இருப்புத் தடியை யெடுத்துக் கொண்டு இவ்விடத்திற்கு வருவான். நான் என்ன செய்வேன்! நான் இந்தக் கூட்டில் அடைபட்டிருப்பதைப் பார்க்கையில் உங்களுக்கே பரிதாபமாயிருக்கிறதன்றோ? பொல்லாத மனிதர் கையில்

அகப்பட்டுக்கொண்டு நான் இப்படிச் சங்கடப்படும்படியாக நேரிட்டிருக்கிறது. எளிய ஜந்துக்களை இப்படிப் பிடித்துச் சிறைப்படுத்துகிறவர்கள் மறு ஜன்மத்தில் தாம் சிறையிலகப்பட்டுப் படாத பாடு படுவார்கள் என்பது நிச்சயம்—என்று சொல்லிற்று.

மனத்திடமுள்ள ஒரு மகள்.

ஒருநாள் ஒரு சிறிய பெண் பள்ளிக்கூடத்தினின்று வீட்டிற்குத் திரும்பிவருகிற வழியில் சில பிள்ளைகள் ஒரு குளக்கரையில் கூட்டமாகக் கூடிக் கூச்சலிட்டுக்கொண்டிருக்கக் கண்டாள். அங்கே அந்தக் கொடிய பிள்ளைகள் ஒரு பூனைக்குட்டியைப் பிடித்து வைத்துக்கொண்டு அதைத் தண்ணீரில் தூக்கி யெறிவதும், அதுகண்டு அந்தப் பேதைப் பிராணி மிகவும் பயந்து நீந்திக்கொண்டு கரைக்கு வர முடியாமல் அல்லாடுவதைப் பார்த்துக் கைதட்டிக் கூவிச் சிரிப்பதுமாயிருந்தார்கள். அத்தருணத்தில் அவர்களிடமிருந்த நாய்களும் மிகவும் உக்கிரமாகக் குரைத்துப் பூனைக்குட்டிக்குப் பின்னும் அதிகமான அச்சத்தை உண்டாக்கின.

இந்தக் கோரமான காட்சியைக் கண்டபோது அந்தப் பெண்ணுக்கு அதிகமான கோப முண்டாகிவிட்டது. உடனே அச்சிறுமி அந்தப் பிள்ளைகளையும் நாய்களையும் ஒதுக்கித் தள்ளிக்கொண்டுபோய்க் குளத்திலிறங்கி, முழுகி முழுகிக் கிளம்பி வருத்தப்பட்டுக்கொண்டிருந்த பூனைக்குட்டியைக் கையிலெடுத்துக்கொண்டாள். அதைப் பார்த்து அந்தப் பிள்ளைகள் வெட்கத்தினால் தலைகுனிந்து ஒவ்வொருவராக மறைந்துபோனார்கள். நெஞ்சுருக்கமுள்ள அந்தச் சிறுமியோ, குளிரினால் உடல் நடுங்கிக் குற்றுயிராகத் துடித்துக்கொண்டிருக்கும் அந்த எளிய ஜீவனை யென்னசெய்வதென்று அங்கேயே சற்று நேரம் ஆலோசித்துக்கொண்டு நின்றாள். அதை இன்னது செய்வதென்று அவளுக்குத் தோற்றவில்லை; அப்பொழுதே அதற்குப் பிராணன் பாதி வழியில் போய்க்கொண்டிருந்தது. அவளது வீட்டில் பூனைகளும் பூனைக்குட்டிகளும் முன்னமே யதேஷ்டமாயிருந்ததனால், இந்தப் பூனைக்குட்டிக்கு அங்கே இடமில்லை யென்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். அதனால் அந்தச் சிறுபெண் பூனைக்குட்டியைப் பார்த்து மிகவும் விசனப்பட்டு, 'ஐயோ! பேதைப்பிராணியே! இனி உயிரை யிழப்பது தவிர உனக்கு வேறு கதியில்லை. ஆனால், சித்திரவதையில்லாமல் சுகமாய்ப் பிராணன்போகும்படி நான் செய்கிறேன்' என்று சொல்லி, முழங்காலிட்டு சுவாமியைப் பிரார்த்தித்துக் கண்ணுங் கண்ணீருமாய், இவ்வுலகத்துத் துன்பங்கள் ஒழியும்படி அதிக தைரியத்துடனே அந்தப் பூனைக்குட்டியைத் தண்ணீரில் அமிழ்த்திவிட்டாள். நாய்களின் கையிலும், நாய்களுக்கொப்பான கொடிய சிறுவர் கையிலும் அகப்பட்டு அவஸ்தைப்படாமல் அதனுயிர் ஒழிந்துபோயிற்று.

உண்மையான ஜீவகாருணிய மிதுவேயன்றோ? இப்படி ஒரு பிராணியை உயிரோடு பிடித்துக் கொல்வதற்கு மனந்தாளுவதில்லை யாகையால் இப்படிப்பட்ட காரியம் தாம் செய்யத் துணிவதில்லை யென்று பலர் சாக்குச் சொல்லுகிறார்கள். எல்லாரும் அப்படியிருந்துவிட்டால் ஆதரிப்பாரில்லாத எளிய ஜந்துக்களின் கதி யென்ன? அவைகள் அநேகமாய்த் துன்புறுத்தப்பட்டுப் பரிதாபமான பிழைப்புப் பிழைக்கின்றனவே. பசிக்கு உணவு கிடைப்பதில்லை, குளிருக்குத் தங்க இட மகப்படுவதில்லை; கொடிய நாய்கள் குரைத்துப் பயப்படுத்துகின்றன; கொடிய சிறுவர்கள் பிடித்துச் சின்னபின்னப் படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட ஜீவன்களுடைய கஷ்டத்தைப் பார்த்து நாம் மனமிரங்கி, ஒரு நிமிஷகாலம் கஷ்டத்தைப் பொறுத்து, அவைகளுடைய உயிர்வாழ்க்கையை அவ்வளவோடு ஒழித்து அவைகளுடைய துன்பத்தைப் போக்குவது மேலான தருமமாகுமன்றோ? உண்மையான ஜீவகாருணிய மிதுவேயாகும்.

நாய்களுக்கு ஆலோசிக்கும் திறமையுண்டா?

நாய்களில் வித்தியாஸம் விசேஷமாயுண்டு. நாம் சொல்லுகிற ஒவ்வொரு விஷயத்தையும் சில நாய்கள் அறிந்துகொள்வதாகக் காணப்படுகின்றன; வேறு சில நாய்களுக்கு அப்படி அறிந்துகொள்ளுகிற அறிவேயில்லை. இந்த விஷயத்தை நன்றாக விளக்குகிற சில சிறு கதைகள் சொல்லுகிறேன், கேளுங்கள்.

வளர்ப்பவரிடத்தில் விசுவாஸமுள்ள நாய்.

ஒரு கிராமத்தில் இரண்டுபேர் இரண்டு நாய்களை வைத்து வளர்த்தார்கள். அவ்விரண்டி லொரு நாயை ஒரு துரைமகள் அது குட்டியாயிருந்த நாள் முதல் வளர்த்துக் காப்பாற்றிவந்தாள். அது அத்தனையாய் உபயோகமுள்ள நாயோ அல்லவோ நானறியேன்; அது தன்னை வளர்ப்பவரிடத்தில் அதிகமான விசுவாஸமுடையது. அவ்வீட்டுக்காரி எங்கேயாவது வெளியே போகும்பொழுது அந்த நாய் கூடவே வாராதபடி அதை ஜாக்கிரதையாய் ஓரிடத்தில் விட்டுப் பூட்டிட்டுப்போவது வழக்கம். அப்படியே ஒருநாள் அந்த வீட்டுக்காரி ஒரு காரியமாக வெளியே போனபோது நாயைக் கட்டி வைத்துவிட்டுப் போனாள். அவள் வெளியே போய்விட்டபிறகு யாரோ அந்த நாயை அவிழ்த்து விட்டார்கள். வெளியே வேலையாகப் போயி

யிருந்த வீட்டுக்காரி வேலை முடிந்து திரும்பி வரும்பொழுது வீட்டிற்குப் போகிற வழியே கண் வைத்துப் பார்த்தாள். அவளுடைய அருமை நாய் வாலைக் குழைத்துக்கொண்டு அவளிட மோடி வந்தது. இப்படியே அவள் மின்சார வண்டிகளில் ஏறிப்போகும்போது அந்த நாயைக் கூட அழைத்துக்கொண்டு போவதில்லை; அதனால் அந்த நாய் அவள் புறப்பட்டுப் போகும்போது அவள் போகிற வழியையே பார்த்துக்கொண்டிருந்து, அவள் திரும்பிவரக் கண்டவுடனே சந்தோஷமாக வாலை யாட்டிக் குரைக்கும்.

உபயோகமான நாய்.

மற்றொரு நாய் சொன்னோமே, அது இப்படி அருமையாக வளர்க்கப்பட்டதன்று. அது எவ்விடத்திலிருந்து வந்ததோ, அதுவும் தெரியாது. ஆனாலும், அதனிடத்தில் இரக்கமுற்று அதை உணவு கொடுத்து அவர்கள் வளர்த்தார்கள். அப்படி அவர்கள் அதை வளர்த்தது வீண்போகவில்லை; அது அவர்களுக்கு அதிக உபயோகமாயிருந்தது. எலி, சுண்டெலி, பெருச்சாளி முதலியவைகளை எவ்விடத்திலே கண்டாலும் உடனே ஓடி அவைகளைப் பிடித்துக்கொள்ளும். அதன் பெயரைச் சொல்லி அவர்கள் கூப்பிடுவார்களானால், அவ்விடத்தில் எலி யிருக்கிறதென்று தெரிந்துகொண்டு உடனே அவ்விடத்திற்கு ஓடிவரும்.

பட்டி நாய்.

இப்படிப்பட்ட ஆலோசிக்கும் திறமை பட்டி நாய்களுக்கு மிகவும் அதிகம். பட்டிநாயாவது இடையர்கள் வைத்து வளர்க்கும் நாய்கள். மந்தையிலிருந்து ஏதேனும் ஒரு ஆடாயினும் மாடாயினும் கன்றுக்குட்டியாயினும் பன்றியாயினும் தப்பியோடிப் போமானால், அந்த நாய் அதை நுட்பமாய் பார்த்துக்கொண்டிருந்து, அதன் பின்னே ஓடி அதைத் திருப்பி மறுபடியும் மந்தையில் கொண்டு சேர்க்கும். அந்த நாயுடன் **ஆடு** என்று சொன்னால், ஆட்டுமந்தையில் எல்லாம் சரியாயிருக்கின்றனவாவென்று ஓடிப் பார்க்கும்; **மாடு** என்று இடையன் கூவினால், மாட்டு மந்தையில் எல்லா மாடுகளும் சரியாயிருக்கின்றனவாவென்று போய்ப் பார்க்கும். இடையன் வீட்டைவிட்டு வெளியே போய்விடுவானானால், அந்த நாய் அவனது வீட்டையும் காத்துக்கொண்டிருக்கும்; அவ்விடையன் வீட்டிற்கு யாராவது ஒருவன் போவானானால், அந்த நாய் அவனை யெதிர்கொண்டுவந்து அழைத்துப் போய், அவனோடு கூடவே அது வீட்டில் சுற்றிக் கொண்டிருக்கும்? அவன் தப்பித் தவறி எதையாவது தொடுவானானால், அது உடனே அவனைக் கடித்துவிடும்; அல்லது அவனைப் பார்த்துக் குரைக்கும்.

ஆடுமாடுகளை மேய்க்கும் நாய்.

சில நாய்கள் இடையனுடைய உதவியில்லாமலே ஆடு மாடுகளை ஓட்டிப்போய் மேய்த்துக் கொண்டு வருவது பார்ப்பவர்களுக்கு வெகு விசித்திரமாயிருக்கும். அந்த நாய்கள் காலையில் ஆடு மாடுகளைப் புலங்களுக்கு மேய ஓட்டிக்கொண்டு போய், அங்கே அவைகளை மேயவிட்டுப் பகல் முழுவதும் காவல் காத்திருக்கும். அடிக்கடி அவைகளைச் சுற்றிச் சுற்றிப் போய்ப் பார்க்கும். அவற்றில் ஏதாவது ஒரு மாடு காணாமற்போனால் அந்த நாய்க்கு அது உடனே தெரியும். அந்த நிமிஷமே ஓடிப்போய் அதை ஓட்டிக்கொண்டு வந்து மந்தையில் சேர்க்கும். பொழுது போனவுடனே மறுபடி அவைகளையெல்லாம் தொழுவத்தண்டையோட்டிக்கொண்டுவந்து சேர்த்துவிட்டு வீட்டிற்குப் போகும்; அவ்விடத்திலேயே அவற்றிற்குக் காவலாகப் படுத்திருப்பதுமுண்டு.

ஜீவ ஜந்துக்களைப்பற்றிய உவமைச் சொற்கள்.

பன்றியைப்போலப் பரிசுத்தமில்லாதவன்.

பன்றி மிகவும் அசுத்தமான பிராணியென்றும், அது மலத்தையே அதிகமாக விரும்புகிறதென்றும் அநேகர் இழிவாக வெண்ணி, 'பன்றியைப்போலப் பரிசுத்தமில்லாதவன்' என்று, சுத்தியில்லாமல் அழுக்குடனிருக்கிற மனிதர்களுக்குப் பன்றியை உபமானமாகச் சொல்லுகிறார்கள். பூமிக்குள் இருக்கிற கோரைக்கிழங்கு முதலானவைகளையே கடவுள் பன்றிக்கு உணவாக ஏற்பாடு செய்திருப்பதால், அந்தக் கிழங்குகளை அது மூக்கினால் தோண்டி யெடுக்கவேண்டியிருக்கிறது. பன்றி குளிர்ச்சியை அதிகமாக விரும்புகிற பிராணியாகையால் கோடைநாளில் சேற்றில் அமிழ்ந்திருக்கப் பிரியப்படுகிறது. அதனாலேயே பன்றியை அழுக்கடைந்த பிர்ராணியென்று இகழலாமா? அது தன் உணவை உட்கொள்ளும்போது அதிக ஆவலுடன் ஓசைப்படுத்திக்கொண்டு விழுங்கித் தின்னுகிறது; தன் கருத்தை வெளிப்படுத்துவதற்காக உறுமுகிறது; அதனாலே பன்றி விகாரமான ஜந்துவென்று பழிக்கலாமா? அழுக்கான உடம்போடு அசுத்தமாயிருக்கப் பன்றி ஒருபோதும் பிரியப்படுவதில்லை; காட்டுப் பன்றிகள் உடம்பில் அணுவளவும் அழுக்கு இல்லாமல் எவ்வளவு நிர்மலமாயிருக்கின்றன பாருங்கள். ஆகையால், 'பன்றியைப்போலப் பரிசுத்தமில்லாதவன்' என்கிற பழமொழியை 'பரிசுத்தமில்லாத பன்றியை வைத்திருக்கிற புருஷனைப்போல அசுத்தமானவன்' என்று மாற்றுவது நலம். பன்றிக் கிடையைச் சுத்தப்படுத்தாமல் மலங்கள்

நிறைந்து துர்க்கந்தம் வீசும்படி வைத்திருப்பது, அப்படிப்பட்ட விடத்தில் பன்றியை விட்டிருப்பவனுக்கல்லவோ அவமானமானது. அழுக்கில்லாமல் நன்ருய்த் தேய்த்துக் குளிப்பாட்டிச் செவ்வையாகப் போஷிக்கப்பட்ட பன்றிகள் நல்ல தேக சவுக்கிய முள்ளவைகளாக வாழ்கின்றன. பன்றிகளை வைத்து வளர்ப்பவர்கள் பலர் அப்படியே தங்கள் பன்றிகளை மிகவும் சுத்தமாகத் தேய்த்துக் குளிப்பாட்டி வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அப்பொழுது அவைகளைப் பார்த்தால் வெளுப்பும், சிவப்பும், கறுப்புமான பளபளப்பாகிய மயிர்களோடு அவைகளின் உடம்பு மிகவும் அழகாகவே காணப்படும். அவைகள் புல் தரையில் ஓடி விளையாடும்போது பார்த்தால் வெகு விநோதமாயிருக்கும்.

பன்றிகள் மலங்களைத் தின்னுகின்றன வென்று சிலர் பழிப்பார்கள். அவை பலவிதமான கிழங்குகளையும், உமி, தவிடு முதலானவைகளையும் தின்கின்றனவே; இவை யெல்லாம் மலமாகுமோ? நமது இரைப்பை தாங்கமுடியாமல் வெளிப்படுத்திவிடுகிற மலத்தை அவை தின்னுகின்றனவே யென்பீர்களோ? அம்மலத்தைத் தின்று சுத்திசெய்வதனுல் அவை நமக்கு எவ்வளவு உபயோகமாயிருக்கின்றன, யோசித்துப் பாருங்கள்! பன்றிகள் மிகப் பரிசுத்தமான பிராணி யென்பதற்குக் காட்டுப் பன்றிகள் சிறிதும் அழுக்கில்லாமல் நிர்மலமாயிருப்பதே போதுமான திருஷ்டாந்தமாம். அந்தக் காட்டுப் பன்றிகளைப் பார்த்து வீட்டுப் பன்றிகளைப் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டிய வகையை மனிதர்கள் தெரிந்துகொள்ளக்கடவர்கள்.

கேட்பவர்களுக்கு அருவருப்பு உண்டாகும்படி பன்றி ஒருவிதமான ஓசையுடன்விகாரமாகத்தின்னுகின்றனவே யென்று சிலர் தூஷிப்பார்கள். பன்றியைப்போல அவ்வளவு நீளமான மூக்கையுடைய பிராணி அப்படியில்லாமல் வேறுவிதமாகத் தின்ன முடியுமோ? பூமியிலுள்ள கோரைக்கிழங்குகளைத் தோண்டித் தின்பதற்காக அப்படிப்பட்ட நீளமான மூக்குடனே ஸ்வாமி அதைச் சிருஷ்டித்திருக்கிருர். அதைப் பார்த்துப் பழிப்பது கடவுளைப் பழிப்பதுபோ லாகுமன்ருே?

கரடியைப்போலக் கடுங்கோபமுடையவன்.

பிறர்மேல் எரிந்துவிழுகிற கோபிஷ்டர்களுக்குக் கரடியைத் திருஷ்டாந்தமாகச் சிலர் சொல்லுகிருர்கள். அது மிகவும் அக்கிரமமானது. ஏனென்ருல், கோபிஷ்டர்களான மனிதர்களைப்போல் அன்னியர்மேல் எரிந்துவிழுகிற குணம் கரடிகளுக்கு ஒருபோதுமில்லை. ஆனுல், அப்படி மனிதர்கள் கோபக்குணமுடையவர்களுக்குக் கரடியைத் திருஷ்டாந்தமாகச் சொல்லும்படி நேரிட்டதற்குக் காரண மொன்று உண்டு. அந்தச் சிறுகதையைக் கேட்பது சிறுவர்களுக்கு மிகவும் விநோதமாயிருக்கும். சிலர் கரடிகளைப் பிடித்துவந்து வீதிகளில் ஆட்டம் ஆடும்படி செய்து விநோதம் காட்டுகிற வழக்கம் நெடுநாளாக உண்டு. அப்படி வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கையில் அந்தக் கரடிகள் அறுத்துக்கொண்டு ஓடுவது உண்டு. அது கண்டு அருகிலுள்ள ஜனங்கள் பயந்து பெருங்கூச்சலிட்டுக்கொண்டு நாற்புறமும் ஓடுவார்கள். அதனுலேயே கரடிகளுக்கு முரட்டுத்தன முடையதென்கிற கெட்ட பெயர் வந்ததாகத் தோற்றுகிறது. அந்த ஆட்டக்கரடி கோபத்தினுல் அறுத்துக்கொண்டு ஓடுவது, மனிதர்கள் செய்யும் உபத்திரவம் பொறுக்க முடியாமல் தப்பித்துக்கொண்டு போவதற்காகவேயன்றி, மனிதர்களைத் துன்பப்படுத்துவதற்காக வன்று. அது அப்படி தன்னை இம்சிக்கிற மனிதர்களுக்குப் பயந்து ஓடும்போது, அவர்கள் கோவென்று கூக்குரலிட்டு அதை யதட்டிப் பின்னே துரத்திக்கொண்டு ஓடி, கையில் அகப்பட்டால் அதைப் பிடித்து அடிக்கவும் அடிப்பார்கள். அதனுல் அந்தக் கரடி பயந்து தன்னுயிருக்கு அபாய மெங்கே வருமோ வென்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் மேல் ஒரு சமயம் பாய்ந்தாலும் பாயும்.

கரடி ஒரு பெரிய காட்டு மிருகமாயிருந்தாலும், மற்றப் பெரிய காட்டு மிருகங்களைப்போலவே சுபாவத்தில் சாதுவாகவே யிருக்கிறது. மனிதர்களைத் துரத்திக்கொண்டு ஓடுவதினும் தான் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவதே அதற்குப் பிரியமானது. தனக்கு ஓடிப்போக நேரே வழியகப்பட்டால் அது ஒருவரையும் எதிர்த்து யுத்தஞ்செய்யாது. கரடிகளை நாம் வெகு சுலபமாகப் பழக்கிச் சுகமாக வாழும்படி செய்யலாம். கரடிகள் மிகவும் எளிதாகவே மனிதருடன் பழகி வாழும் தன்மையுடையவை. சீமையில் ஒரு *மிருகாசயத்தின் பக்கத்தில் பெரிய அன்னஸத்திர மொன்று உண்டு. அந்த ஸத்திரத்தில் சாப்பிட்டு மிகுந்த உணவுகளை அந்த மிருகாசயத்தில் எறிவது வழக்கம். அந்த மிருகாசயமான தோட்டத்திலுள்ள மிருகங்கள் இராத்திரியில் அந்த உணவுகளை வந்து தின்றுகொண்டிருந்தன. அவைகளில் கரடிகளே மிகவும் அதிகமாம். அது தெரிந்து அந்த ஸத்திரத்தில் வரும் விருந்தாளிகள் இரை தின்ன வரும் கரடிகளைப் பிரதிதினம் வேடிக்கையாக வந்து பார்ப்பார்கள். அந்த மிருகங்கள் அவர்களை ஒன்றும் செய்யாமல் ஒன்றுக்கொன்று எவ்வளவோ நேசமாய் வந்து தின்றுவிட்டுப் போகுமென்று அந்த விநோதத்தை நேரில் கண்ட ஒருவர் சொல்லுகிருர்.

---

* மிருகாசயம் = மிருகங்களைப் பிடித்துவைத்துக் காப்பாற்றும் தோட்டம்.

ஒரு சிறிய வாத்து.

ஐரோப்பியர்கள் அநேகமாய்ப் புத்தியில்லாதவளைப் பார்த்து 'வாத்து (கூஸ்)' என்று இழிவாகப் பேசுவது வழக்கமென்று முன் சஞ்சிகையில் சொன்னேமல்லவா? அப்படியே ஒருநாள் பள்ளிக்கூடம் போகாத ரத்தினம் என்கிற சிறுபெண்ணைப் பார்த்து அவளுடைய சகோதரனை மாணிக்கமென்பவன் 'அடி வாத்தே!' என்று இழிவாகப் பேசினான்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த மோகனம் என்கிற பெண், 'அண்ணா! நீ என்ன அப்படி சொல்லுகிறாயே! நமது அப்பா ஆண்வாத்து, அம்மா பெண் வாத்து, நமது ரத்தினம் குட்டிவாத்தல்லவா?' என்று சொன்னாள்.

அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு, ஒருவர் அவர்களண்டை போய், 'பிள்ளைகளே! நான் உங்களுக்கு வாத்தைக் குறித்துப் பிரசித்தமான கதையொன்று சொல்லுகிறேன் கேளுங்கள்: வாத்தென்றால், அதை நீங்கள் அற்பமென்று எண்ணாதேயுங்கள். பூர்வத்தில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே இத்தாலியா தேசத்தில் ரோமாபுரியைப் பிடிக்கப் பகைவர்கள் ஒருநாள் இராத்திரி வந்து கோட்டைக்குள் புகுந்து மேலே ஏறிவிட்டார்கள். அதுகண்டு அங்கிருந்த ஒரு வாத்து தன் சிறகை யடித்துக்கொண்டு கூச்சலிட்டது. அதைக் கேட்டவுடனே, நல்ல நித்திரையாயிருந்த காவற்காரர்கள் விழித்துக்கொண்டு உடனே ஆயுதத்தைக் கையிலெடுத்துப் பகைவர்களை யடித்தோட்டிவிட்டார்கள். ஆகையால் வாத்தென்றால் அற்பமென்று எண்ணவேண்டாம்; பிராசீனமான பெரிய பட்டணத்தைக் காப்பாற்றின சிறந்த பக்ஷியாம்.

மேலும், வாத்துக்கள் நம்முடைய ரத்தினம், மாணிக்கம் இவர்களைப்போலப் படிக்கத் திறமையில்லாதவைகளானாலும், அங்கிலேய பாஷையின் எழுத்துக்களை அவை வெகுநாளைக்கு முன்னமே தெரிந்துகொண்டிருக்கின்றன. அவை பறந்து போகையில் எப்போதும் (A) ஏ என்கிற எழுத்தைப்போலவும் (V) வி என்கிற எழுத்தைப்போலவும் அணிவகுத்துப் பறப்பதே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமல்லவா?

அன்றியும், அவைகளுக்கு எழுதத் தெரியாவிட்டாலும், எழுத்துக்களை யெழுத மனிதர்களுக்கு அவை உதவிசெய்து வருகின்றன' என்று சொன்னான். அதைக் கேட்டு ரத்தினம் ஆச்சரியப்பட்டு 'அதெப்படி ஐயா' என்று கேட்க, அவன் நகைத்துச் சொன்னதாவது, 'இந்தப் பக்ஷிகள் தம் இறகுகளை மனிதர்களுக்குக் கொடுத்தன; மனிதர்கள் அவற்றைக் கூராகச் சீவி எழுதுகோலாக்கிக் கொண்டார்கள். எஃகு பேனா செய்யப்படுவதற்கு முன்னே பல வருஷங்களாக ஒவ்வொருவரும் இறகு பேனாக்களையே எழுத உபயோகப்படுத்தினார்கள். பாடசாலையில் படிக்கும் சிறுபிள்ளைகளும் வாத்தின் இறகுகளாலேயே எழுதிவந்தார்கள். அந்தப் பேனாக்களின் கூர் மழுங்கிப்போனால், 'ஐயா! என் பேனாவைச் சற்றே சீவிக்கொடும்' என்று உபாத்தியாயரைப் பிள்ளைகள் வேண்டுவார்கள். அவர் அதைக் கேட்டுத் தம்மிடத்திலுள்ள கத்தியை யெடுத்துப் பேனாவை நன்றாகச் சீவிக் கொடுப்பார். இந்தக் காரணம்பற்றியே பேனா சீவும் கத்திகளுக்குப் பேனாகத்தி யெனவே பெயர் பிரசித்தமாகிவிட்டது' என்று சொன்னார். அதைக்கேட்டு அந்தப் பிள்ளைகள் சரிதான், சரிதான் என்று சொல்லிச் சந்தோஷப்பட்டார்கள்.

தேனீக்கள் கற்பிக்கும் எட்டு நன்னெறிகள்.

1. நாம் உழைப்பாளிகளா யிருக்கும்படி தேனீக்கள் நமக்குக் கற்பிக்கின்றன; அவைகள் உழைக்காமல் ஒருபோதும் சோம்பேறிகளா யிருப்பதில்லை.

2. ராஜபக்தியும் கீழ்ப்படியுங்குணமு முள்ளவர்களாயிருக்கும்படி அவை நமக்குக் கற்பிக்கின்றன; தேனீக்கள் தங்களுக்கு யஜமானியான இராணி ஈக்குக் கீழ்ப்படிந்து அது கட்டளையிடுகிறபடி கேட்டு நடக்கின்றன.

3. சொந்த கிருகத்தில் அபிமானமுள்ளவர்களா யிருக்க அவை நமக்குக் கற்பிக்கின்றன; தேனீக்கள் ஒருபோதும் தமது கூட்டைவிட்டு வெளியே போவதில்லை; அவசியமாயிருந்தால் எப்பொழுதாவது சற்றுப் போய் உடனே திரும்பி வந்துவிடும்.

4. நாமெல்லாம் சுத்தமாயிருக்கும்படி அவை நமக்குக் கற்பிக்கின்றன; தேன் கூட்டைப்போல அவ்வளவு சுத்தமான விடம் மற்றொன்றைக் காண்பது அரிது.

5. ஆபத்துக் காலத்தில் தேனீக்கள் ஒன்றுக்கொன்று அதிகமான அன்பு பாராட்டுகின்றன; ஒரு ஈக்கு ஒரு துன்பம் வந்துவிட்டால், மற்ற ஈக்கள் தம்மாலானவளாயில் அதற்குத் துணைசெய்யப் பாடுபடுமேயொழிய ஒரு நிமிஷங்கூட அதை விட்டு அப்புறம் போவதில்லை.

6. தேனீக்கள் பிரதிதினம் அதிகாலையி லெழுந்திருப்பவை யாதலால், நமக்கும் அந்த நல்ல வழக்கத்தைக் கற்பிக்கின்றன.

7. தேனீக்கள் நல்ல காற்றில் உலாவுவதற்கு அதிகமான விருப்பமுள்ளவைகளா யிருக்கின்றன.

8. தேனீக்கள் சிறிதும் கோபதாபமில்லாமல் சாந்தமாக வாழ்கின்றவை; அவைகள் ஒன்றுக்கொன்று கலகப்பட்டு ஒருபோதும் சண்டை போடுவதில்லையாகையால், அப்படிப்பட்ட நல்லகுணத்தை நாம் கைக்கொள்ளும்படி தாம் மேல்வரிச்சட்டமாக நடந்து நமக்குக் காட்டுகின்றன.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1903.